
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1055**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**141**




# ‘அண்ணாவின் போர்வாள்’

# கம்பம் மா.ராசாங்கம்!

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கம்பம் மா.ராசாங்கம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.**

**1965**-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்த நேரம், மதுரையில் மாணவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடூர தாக்குதல்களில் தமிழ்நாடே கொந்தளித்தது. பேருந்துகள், ரயில்கள் முடங்கின. அன்றைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், கூடலூரில் நடைபெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டு, ஐந்து பேர் மாண்டனர். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். போராட்டக்காரர்கள் பயந்து ஓடிவிடுவார்கள் என நினைத்த ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சி. அதற்குப் பிறகுதான் போராட்டம் மூர்க்கமாக நடைபெற்றது. ஏனென்றால், போராட்டத்தில் முன்வரிசையில் நின்று தலைமையேற்றுச் சென்றவர் உத்தமபாளையம் சட்டமன்ற உறுப்பினர் மா.ராசாங்கம். கழக உறுதி பெற்ற களவீரர். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்ற உடன்பிறப்பு. அண்ணாவின் போர்வாள், கழக மாவீரன் என்பது கலைஞர் சூட்டிய பண்புப் பெயர்.

10.07.1932-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் மாயாண்டி - அங்கம்மாள். ராசாங்கம் அவர்களின் தாயார் அங்கம்மாள் அவர்களுடைய தாத்தா, முல்லைப் பெரியார் அணை உருவாக்கத்தில் பென்னி குக் அவர்களின் மெய்க்காப்பாளராக இருந்தவர் என்பதால், ராசாங்கம் அவர்களின் குடும்பம் சமூக செல்வாக்குமிக்க குடும்பமாகத் திகழ்ந்தது. இளம்வயதிலேயே பேரறிஞர் அண்ணாவின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்க அரசியல் கருத்தியலோடு பயணப்படலானார். தேனி, கம்பம், உசிலம்பட்டி, உத்தமபாளையம் பகுதிகளில், காங்கிரஸ் கட்சியும், ஃபார்வர்ட் ப்ளாக் கட்சியும் செல்வாக்கு செலுத்திய காலத்தில் தி.மு.கழக பற்றோடு இயங்கியவர் ராசாங்கம்.

1951-ஆம் ஆண்டு, தேனியில் நாவலர் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தைப் பார்க்கச் சென்று, அந்தக் கூட்டத்தில் சில விஷமிகள் கல் கொண்டு தாக்கி, கலவரம் செய்த சம்பவத்தில் இருந்து கழகத்தினரோடு நெருங்கி பயணம் செய்யத் தொடங்கினார். 1955-ஆம் ஆண்டு தி.மு.கழகத்தின் மதுரை மாவட்ட 2-வது மாநாட்டில், கழகத்தினரோடு இணைந்து பல பணிகளில் சிறப்பான வகையில் ஒருங்கிணைத்தவர்களில் ஒருவராக இருந்தார்.

### மதுரை சிறைக் கொடுமை

1961-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராக கலைஞர், கேரள எல்லையான வண்டிப் பெரியார் ஊருக்கு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கையில், அவரோடு நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், ராசாங்கம் ஆகியோருடன் சென்றதையும், அங்கு ஏற்பட்ட கலவர நினைவுகளையும் ‘நெஞ்சுக்கு நீதி’யில் பதிவு செய்துள்ளார். 1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில், உத்தமபாளையத்தில் இருந்து 300 தோழர்களுடன் கைதாகி சிறை நிரப்பியவர் ராசாங்கம். அப்போது அவருடன் சேர்ந்து 115 பேருக்கு 2 மாதம் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

1962-ஆம் ஆண்டு, உத்தமபாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக, பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 43 சதவிகித வாக்குகளுடன் வெற்றி பெற்றவர் ராசாங்கம். 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புக்கு எதிரான போராட்டத்தில் கைதாகி, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு, அவருக்கு நடந்த சிறைக் கொடுமையை, தனது ‘பெண்ணில்லாத ஊரிலே’ நூலில் பதிவு செய்யும் அன்றைய அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள், ராசாங்கத்தை ஓர் அறையில் அடைத்து, அவரின் முதுகில் மின்சாரத்தைப் பாய்ச்சி கொடுமை செய்ததாக குறிப்பிட்டுள்ளார். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவருக்கே இந்தக் கதி என்றால், கைது செய்யப்பட்ட மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? என அந்த நாள்களைக் குறிப்பிடுகிறார்.

‘ராசாங்கத்தோடு கைதான 200-க்கும் மேற்பட்டவர்கள் போலீஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

வலை பின்னியதுபோல முதுகெல்லாம் பிரம்படி, சதை கயிறு கயிறாகப் பிய்ந்திருந்தது’ என்கிறது எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் குறிப்பு.

சிறையில் கொடுமை செய்த அதிகாரிகள் ராசாங்கத்தைப் பார்த்து, “நூறு வருஷம் போராடினாலும் இந்தியை ஒழிக்க முடியுமா உங்களால்?” என்று கேட்ட கேள்விக்கு, “ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்தியை எதிர்த்தே சாவோமே தவிர, அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என உறுதியோடு பதில் அளித்தவர் ராசாங்கம். அந்த நாள்களில் கலைஞர் கைது செய்யப்பட்டு, பாளையங் கோட்டை தனிமைச் சிறையில் அடைக்க அழைத்துச் செல்லும் வழியில், மதுரை மத்திய சிறையில் ராசாங்கம் அடைக்கப் பட்டிருந்த அறையில், ஓர் இரவு அடைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

> **“ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்தியை எதிர்த்தே சாவோமே தவிர, அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்!”**

### ஆதரிக்க வேண்டாம்

தமிழ்நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கு வழிகண்ட 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது பேரறிஞர் அண்ணா அவர்களால் கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டவர். அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையேற்று சிறப்புடன் செயல்பட்டவர்.

1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர், உசிலம்பட்டி தொகுதி மக்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள் என சாதி ரீதியாக சிலர் வெளியிட்ட ஓர் அறிக்கையில், ராசாங்கம் அவர்கள் குறித்து வைத்திருந்த கருத்தில், ‘அண்ணாவின் மேல் பற்று வைத்திருக்கும் அளவுக்கு, நம் சாதி தலைவர் மேல் பற்று வைக்கவில்லை’ ஆகவே அவருக்கு சட்டமன்றத்துக்கோ, நாடாளுமன்றத்துக்கோ ஆதரவு தெரிவிக்க வேண்டாம் எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால், திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் ராசாங்கத்தை வெற்றிபெற வைத்து, டெல்லி ராசாங்கத்துக்கு அனுப்பி வைத்தார் கலைஞர். அந்தப் பதவியில் அவர் இருக்கும்போதுதான் இயற்கை எய்தினார்.

1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதுரை மாவட்டக் கழக மாநாடு ‘கலைஞரின் மனசாட்சி’ முரசொலி மாறன் தலைமையில் நடைபெற்றது. அப்போதுதான் எம்.ஜி.ஆர். ‘ஒரு கதாநாயகியை’ மேடையேற்ற விரும்பினார். அதற்கு மாநாட்டு வரவேற்பாளர் மதுரை முத்து உறுதியாக மறுத்தார். குறிப்பாக, மாநாட்டுப் பணிகளில் மாறன் அவர்களோடு நாடாளுமன்ற உறுப்பினராகத் துணை நின்றவர். 1972-ஆம் ஆண்டு பிற்பகுதியில், கழகமும், கலைஞரும் பெரும் நெருக்கடிகளைக் கண்டு கொண்டிருந்த நேரத்தில், கழகத்தையும், ஆட்சியையும் காப்பாற்ற வேண்டி கலைஞர் போராடிக் கொண்டிருந்த நாளில் 22.10.1972 அன்று எதிர்பாரா வகையில் இயற்கை எய்தினார் ராசாங்கம்.

அவரது மறைவுக்குப் பின்னர், கூடலூரில் ராசாங்கம் அவர்களின் உருவச் சிலையை திறந்து வைத்த கலைஞர், கூடலூரில் அரசுப் பள்ளிக்கு ராசாங்கம் பெயர் சூட்டி, இன்று அவரது நினைவுகளை நிலைத்திருக்கச் செய்தார். இன்றும் கழக உடன்பிறப்புகள் அவரது நினைவுநாளில் திரண்டு மரியாதை செய்கின்றனர். “தி.மு.க. ஒரு தற்காப்பு மிகுந்த இயக்கம். விரும்புவோரை அது அணைக்கும், ஒதுங்குவோரைக் கண்டால் ஒதுக்கும். ஆனால், யாராவது அதை அழித்துவிட நினைத்தால் அவர்களை அது ஒழிக்காமல் விடாது” என்று தனது கொள்கை உறுதியைப் பறைசாற்றிய ராசாங்கத்தின் குரல் இன்று கழக எதிர்ப்பாளர்களுக்கு எச்சரிக்கைக் குரலாக ஒலிக்கும்.

---

## 100 நாள் வேலையை ஒழிக்க, பா.ஜ.க. செய்யும் சதி!

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை பலவீனமாக்கி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தற்போது திட்டத்தின் பெயரில் இருந்து காந்தியை நீக்கும், அவர்களின் காந்தி எதிர்ப்பு அரசியலை இதிலும் செய்திருக்கிறது. இதுகுறித்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ‘விக்னேஷ் ஆனந்த்’ என்பவர், “நூறு நாள் வேலைத்திட்டம் என்பது ஏழை மக்களின் கண்ணியத்தையும் சுயமரியாதையையும் காக்கும் திட்டம். இத்திட்டத்தை முடக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

2013-14 நிதியாண்டில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கு ரூ.39,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பா.ஜ.க. ஆட்சி அமைந்த பின்பு 2014-15 நிதியாண்டில் ரூ.24,000 கோடியாகக் குறைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் 92 லட்சம் பேர் 100 நாள் வேலைத்திட்டத்துக்கு பதிவு செய்துள்ளனர். இதில், இந்த ஆண்டு 33,000 நபர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு நீக்கியுள்ளது. இதுவரை MNREGA திட்டத்தில் பதிவு செய்தவர்களுக்கு வேலை ஒதுக்கீட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (Block Development Officer) அளவில் செய்து வந்த நிலையில், இனி அதை டெல்லியிலிருந்து நிர்வகிக்கப்போகிறார்கள். 2025-26 முதல் ஒன்றிய அரசு இத்திட்டத்தின் நிதி உதவி முறையை மாற்றத் திட்டமிட்டுள்ளது. இதுவரை 100% ஊதியத்தை ஒன்றிய அரசு வழங்கி வந்த நிலையில், இனி 60:40 விகிதத்தில் மாற்றியுள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.4,000 கோடி மாநில அரசு வழங்க வேண்டும்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு நிதி விடுவிப்பில் ஏற்பட்ட தாமதமும், மாநில அரசின் மீது சுமத்தப்படும் 40% நிதிச்சுமையும் வறுமை ஒழிப்புத் திட்டமாகக் கருதப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தை, ஏழைகளை ஒழிக்கும் திட்டமாக பா.ஜ.க. மாற்றியுள்ளது” எனப் பதிவிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணி கொடியேற்றும் நிகழ்ச்சி!



டி.ராஜூ

1988-ஆம் ஆண்டு, அப்போதைய செங்கை அண்ணா (வடக்கு) மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சிபானம் பாக்கம் கிராமத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்ற இளைஞர் அணி கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், இன்றைய சிறுபான்மை மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், அந்தக் கிளையின் இளைஞர் அணி அமைப்பாளராக தளபதி அவர்களுக்கும், கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும் நான் வரவேற்பு அளித்தது மறக்க முடியாத நிகழ்வு.

**- டி.ராஜூ, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், மாவட்ட முன்னாள் துணை அமைப்பாளர், விவசாயத் தொழிலாளர் அணி, திருவள்ளூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### கழக அமைப்பு 2-வது தேர்தல்!

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரி 20-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் கோவை பேரூரில் நடைபெற்றது. 1952 டிசம்பர் முதல் 1955-ஆம் ஆண்டு ஏப்ரல் வரை, பேரறிஞர் அண்ணா அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டு, கழகப் பொறுப்புகளை ஏற்றிருந்த அனைவருக்கும் அந்தக் கூட்டம் கடைசி பொதுக்குழுக் கூட்டமாகும். கழக அமைப்புகளுக்கான 2-வது தேர்தலை நடத்துவது குறித்து அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.